# இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?



## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# சங்கீதம் 133:1-3

1. இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்
பண்ணுகிறது எத்தனை நன்மையும்
எத்தனை இன்பமுமானது?

2. அது ஆரோனுடைய சிரசின்மேல்
ஊற்றப்பட்டு, அவனுடைய தாடி
யிலே வடிகிறதும், அவனுடைய அங்கி
களின்மேல் இறங்குகிறதுமான நல்ல
தைலத்துக்கும்,

3. எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்
கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பா
யிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்
றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனை
யும் கட்டளையிடுகிறார்.

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

ஓரிடத்தை விட்டு புறப்படும்போது, அவர்களுடன் நான் கைகுலுக்கும் சமயத்தில், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதைத் தாங்க முடியாமல் அவர்கள் குழந்தைகளைப் போல் கதறுவார்கள். அவர்கள் அவ்வளவு அதிகமாக ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தனர்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-14E உன்னை தாழ்த்து

யோசித்துப் பாருங்கள் நாம் வல்லமை என்றழைக்கும் வரங்கள் பெரிதாயிருக்கு மானால், “மலைகளைப் பேர்க்கதக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்று மில்லை'' என்று பவுல் கூறினதை யோசித் துப் பாருங்கள். நாம், ”எனக்குப் புரிந்தா லும்... நான் வேதத்தை அறிந்திருந்தால் நலமாயிருக்கும்'' என்கிறோம்.

**“நான் தேவனுடைய சகல இரகசியங் களையும் அறிந்திருந்தாலும், அன்பு எனக் கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. பாருங் கள், நான் முன்னேறவே இல்லை” பாருங் கள், முக்கியமான காரியம் தேவனுடைய அன்பு. அதனுடன் உங்களைத் தாழ்த்துங் கள்.**

38. இத்தனை ஆண்டுகளாக உலகம் பூராவும் சுவிசேஷ வேலையில் ஈடுபட்டு பல்வேறு மக்களைக் கண்ட நான், உள்ளே நுழையும் வாசலைக் குறித்து சிறிது அறிந்திருக்க வேண்டும்.

**நீங்கள் தேவனுடன் தொடர்பு கொள்ள விரும்பினால், அகந்தையுள்ள ஆவி உங்க ளைப் பிடிக்க அனுமதிக்க வேண்டாம்.**

**எந்த குரோதமும் உள்ளே வர அனுமதிக் காதீர்கள்.**

**யார் என்ன செய்த போதிலும், அவர்கள் தவறு செய்தால், அவர்களிடம் விரோதம் பாராட்ட வேண்டாம்.**

பாருங்கள்? **நீங்கள் இனிமையாயும் தயவாயும் இருங்கள்.**

**நீங்கள் பாவத்திலிருந்த போது தேவன் உங்களில் அன்பு கூர்ந்தார் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.**

**தேவனுடைய ஆவி உங்களுக்குள் இருக்குமானால், மற்றவர் தவறு செய்த போதிலும் அவரை நீங்கள் நேசிப்பீர்கள்.**

பாருங்கள், அவர்களுக்காக ஜெபியுங் கள், ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள்.

**எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத் தில் அன்பு கூருங்கள், ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள்.**

தேவனிடத்தில் தாழ்மையாயிருங்கள், ஒருவருக்கொருவர் தாழ்மையாயிருங்கள். **தேவன் அதை ஆசீர்வதிப்பார்.** அவர் என்ன செய்வாரென்று கூறுவது கடினம்.

**வழக்கமாக ஒரு சபையின் எண்ணிக்கை அதிகரித்து, அது பெரிதாகிக் கொண்டு வர**

**ஆரம்பித்தால், அப்படி ஏதாவதொன்று நடந்தால், அவர்கள் உண்மையானதை விட்டு அகன்று சென்றுவிடுகின்றனர்.**

39. நான் முதலில் தொடங்கி, கர்த்தர் அந்த நதியில் எனக்குத் தோன்றி அதை கூறினாரல்லவா, அதை நிகழப் பண்ணி னது எது தெரியுமா? சகோ. வேயில் அநேக ஆண்டுகளுக்கு முன்பு கனடாவில் வெளியான ஒரு செய்தித்தாளில் கர்த்த ருடைய தூதன் நதிக்கரையில் தோன்றின செய்தியைக் கண்டார் என்று நினைக்கி றேன். அது 'அஸோஸியேட் பிரஸ்' என்னும் செய்தித்தாள். அந்த செய்திக்கு: “ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த போது, உள்ளூர் போதிகரின் மேல் தெய் வீக ஒளி" என்னும் தலைப்பு கொடுக்கப் பட்டிருந்தது.

அதை செய்தது எது தெரியுமா? வீதி யின் மறுபுறத்தில் சுமார் இரண்டாயிரத்து

ஐந்நூறு பேரைக் கொள்ளும் ஒரு கூடாரம் இருந்தது. அப்பொழுது நான் ஒரு இளைஞன்.

**எல்லாவிடங்களிலிருந்தும் போதகர்கள் வந்து, "சகோதரனே, இங்கு ஒரு நிமிடம் வாருங்கள். இந்த ஜனங்களை ஒரு மனதுடன் எப்படி வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்? அவர்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருகின்றனரே... இப்படி ஒருவரிலொருவர் அன்பு கூரும் ஜனங்களை நான் கண்ட தேயில்லை" என்பார்கள்.**

40. **அது கர்த்தரால் உண்டானது. இந்த சபை அதன் பேரில் தான் நிறுவப்பட்டது- தெய்வீக அன்பின் பேரிலும், ஒருவர் மற்றவர் பேரில் வைத்துள்ள சகோதர அன்பின் பேரிலும்.**

**ஓரிடத்தை விட்டு புறப்படும்போது, அவர் களுடன் நான் கைகுலுக்கும் சமயத்தில், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதைத் தாங்க**

**முடியாமல் அவர்கள் குழந்தைகளைப் போல் கதறுவார்கள். அவர்கள் அவ்வளவு அதிக மாக ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தனர்.**

**அவர்கள் வீட்டுக்கு நான் விஜயம் செய்யும் போது, வேதாகமம் திறந்து வைக்கப்பட்டு, கண்ணீரினால் நனைந் திருப்பதை நான் கண்ட நேரங்கள் உண்டு.**

இரவு நேரங்களில் அவர்களுடைய வீடுகளுக்கு செல்லும்போது, பெற்றோர் ஒன்று கூடி, பிள்ளைகள் அவர்களைச் சுற்றி தரையில் இருப்பார்கள்.

**பெற்றோர்கள் முழங்கால்படியிட்டு அழுது ஜெபிப்பார்கள்.**

**நான் வாசற்படியில் நின்று காத்திருப் பேன், காத்திருப்பேன், காத்திருப்பேன். அவர் கள் ஜெபத்தை நிறுத்தமாட்டார்கள்.**

**நான் படிக்கட்டில் உட்கார்ந்து, அவர் களுக்காக காத்திருக்கும் நேரத்தில், நானே ஜெபிக்கத் தொடங்கி விடுவேன்.**

அப்படித்தான் நின்று கொண்டு இந்த பழைய பாடலைப் பாடுவது வழக்கம்:

நம் இருதயங்களை கிறிஸ்தவ அன்பி னால்

பிணைக்கும் கட்டு ஆசீர்வதிக்கப்படு வதாக

ஒரே சிந்தையுடையவர்களின் ஐக்கியம்

மேற்கூறியது போன்றிருக்கும்

நாம் பிரிந்து செல்லும்போது

நமக்கு உள்ளில் வேதனை தருகிறது

நாம் அப்பொழுதும் இருதயத்தில் இணைக்கப்பட்டு

மறுபடியும் சந்திப்போமென நம்புகிறோம்.

41. கிறிஸ்துவுக்குள் என் இருதயத்தில் மிகுந்த களிப்பைக் கொண்டவனாக இதைக் கூறுகிறேன். இன்றிரவு அநேகர் அந்த மகத்தான உயிர்த்தெழுதலை எதிர் நோக்கினவர்களாய் இந்த கல்லறைகளில் படுத்து நித்தரை செய்து கொண்டிருக் கின்றனர். அவர்கள் உயிர்த்தெழுந்த பின்பு அவர்களை நாம் சந்திப்போம்.

**பரிசுத்த ஆவி இந்த இடத்தை விட்டு போகாதிருப்பதாக !**

அது போய்விடுமானால், உங்கள் போதகர் எவ்வளவு சொல்லாற்றல் படைத்தவரா யிருந்தாலும், அவர் எவ்வளவு நன்றாக தேவனுடைய வார்த்தையை கொண்டு வந்தாலும் எனக்குக் கவலையில்லை. ஏனெனில் பரிசுத்த ஆவி வருத்தத்தோடு இங்கிருந்து போய்விட்டார்.


பாருங்கள்? **ஆனால் நாம் ஐக்கியப் பட்டு, இவ்வனைத்தையும் பொதுவாக பெற்று, ஒருவரிலொருவர் அன்பு கூருவோ மானால், தேவன் நம்மோடு சேர்ந்து கிரியை செய்வார்.**

**ஜனங்கள், "நீங்கள் தாழ்மையுள்ள சபையை, உண்மையில் தேவனை நேசிக்கும் சபையை காண விரும்பினால், அந்த கூடா ரத்துக்கு ஒரு முறை சென்று பாருங்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அக்கறையையும் மதிப்பையும் பாருங்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் போது அவர் கள் எவ்வளவு பயபக்தியாக அதை கேட் கின்றனர். அங்கு எல்லாமே ஒழுங்காக அமைந்துள்ளது" என்று கூறும் நேரத்துக்காக நாம் காத்திருக்கிறோம்.**


**நீங்கள் வீட்டில் தங்கிவிடவேண்டாம். தேவன் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வாரானால், உங்கள் சகோதரருடன் ஐக்கியங்கொள்ள, இக்கூடாரத்தின் கதவுகள் திறக்கும் வரைக்கும் உங்களால் காத்திருக்க முடியாது. அத்தகைய உணர்ச்சி உங்களில் இல்லையென்றால், நீங்கள் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டிய நேரம் இதுவே என்று உங்களிடம் கூற விரும்புகிறேன்.**

செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# நீங்கள் கர்த்தரின் ஆட்டுக்குட்டிகள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-02-17 கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன்

20. அன்றொரு நாள் நான் உணவு விடுதிக்குச் சென்று உணவு உண்டு கொண் டிருந்தேன்-நீங்கள் அங்கு செல்வீர்க ளென்று விடுதியின் முதலாளியான ஜெர்ரி எதிர்பார்க்கிறார். நம்மில் ஒருவர் அங்கு சென்றிருந்தார். அப்பொழுது அந்த முதலாளி, ''இந்த வாரம் எனக்கு நல்ல வியாபாரம் இருக்கும்'' என்றாராம். அவர், ''இங்கு கைப் பந்தாட்டம் (Basket ball) நடக்கப்போகின்றது. அதுவுமல்லாமல் சகோ.பிரான்ஹாம் கூட்டம் நடத்தப் போகின்றார். எனவே நிறைய பேருக்கு நான் உணவு கொடுப்பேன்'' என்றார். ராஞ்ச் வீடு (Ranch House), அங்குள்ள

இடங்களில் ஒன்று. அவர்கள் உண்மையில் நல்லவர்களாய் இருந்து வந்துள்ளனர்.

21. உங்களை நான் மெச்சுகிறேன், பெருமையடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களைக் குறித்து நல்ல காரியங்களை அவர்கள் கூறவில்லை .....

22. அன்றொரு நாள் காலை ராஞ்ச் வீட்டின் மேலாளர் என்னை சந்தித்தார். நான் அரிசோனாவிலிருந்து 2.30 மணிக்கு அங்கு அடைந்தேன்.

அவர், ''சகோ. பிரான்ஹாமே, இன்னும் ஒரு கூட்டம் நீங்கள் வைக்கப் போவதாக கேள்விப்பட்டேன். அது எனக்கு உதவியா யிருக்கும்'' என்றார்.

**அவர் தொடர்ந்து, “இன்னும் ஒரு காரியத்தை உங்களிடம் கூற விரும்புகிறேன், உங்கள் கூட்டத்திலிருந்து - இங்கு வருபவர்**

**கள் உண்மையில் மிகவும் நல்லவர்கள்” என்றார்.**

**அதைக் கேட்ட போது, அது எனக்கு நல்லுணர்வைத் தந்தது (பாருங்கள்?).** நீங்களெல்லாரும் என் குழந்தைகள். (Kids). இல்லை, பிள்ளைகள். குழந்தைகள் என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்படும் அந்த சொல் வெள்ளாட்டைக் குறிக்கின்றது. நீங்கள் வெள்ளாடு அல்ல, நீங்கள் என் ஆட்டுக்குட்டிகள். உங்களுக்கு எப்படி தோன்றுகிறது? நீங்கள் கர்த்தரின் ஆட்டுக் குட்டிகள். உங்களை போஷிப்பதற்கும் அவர் என்னை அனுமதித்துள்ளார். அவர் தொடர்ந்து என்னை அனுமதிப்பாரென்று நம்புகிறேன். நாம் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம்.....


நீங்கள் ஒருவரோடொருவர்
இனிமையாக இருந்து,
ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து
தயையுள்ளவர்களாக இருங்கள்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்

77. சகோதரன் நெவில் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இந்த கூடா ரத்தின் பொறுப்பாளியாய் நியமிக்கப்பட் டிருக்கிறார். நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புவது என்னவென்றால், அவர் இந்த செய்தியை விசுவாசித்து, நான் போதிப்பது போன்றே அவரும் அதை போதிக்கிறார். சகோதரன் நெவிலின் பிரசங்கத்தை கேட்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றி நீங்கள் இங்கு வருவீர்களானால், அது உங்களுக்கு நன்மை பயக்கும் என்று அறிவேன். அவர் இயேசு கிறிஸ்துவின் மகத்தான ஒரு ஊழியன்.

78. என் சிறு வயது முதற்கொண்டே ஆர்மன் நெவிலை எனக்குத் தெரியும். அவர் சிறிதளவும் மாறவேயில்ல. ஆனால் ஒரு மாற்றம் -தேவனுக்கு அருகாமையில் அவர் வந்துவிட்டார். நான் மெதோடிஸ்டு மேடைக்கு அழைக்கப்பட்டபோது, அங்கு அவரை சந்தித்தேன். நான் இக்கூடாரத் திற்கு திரும்பி வந்து, என்றாவது ஒரு நாள் நான் அவருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பேன் என்றேன். இதோ அவர் இங்கு இந்த செய்தியுடன் இருக்கிறார்- தீரமான, உண்மையான தேவ ஊழியன்.

79. சகோதரன் நெவிலுக்கு அநேக பிரயாசங்களும் மனக்கவலைகளும் உண்டு. ஆனால் அதையெல்லாம் அவர் இக்கூடாரத்தில் காட்டிக் கொள்வதில்லை. ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள அந் தரங்க காரியங்களை அறிந்து கொள்ளும்

வாய்ப்பினை தேவன் எனக்குத் தந்திருக் கிறபடியால், அவர் எதைக் கடந்து கொண் டிருக்கிறார் என்று எனக்குத் தெரியும் - அது அதிகமாயுள்ளது. பாருங்கள் அவர் அதிகமான கஷ்டங்களையும் தொல்லை களையும் அனுபவித்துக் கொண்டிருக்கி றார். மோசேயின் கரங்களை யோசுவாவும் காலேபும் உயர்த்தி பிடித்திருந்தது போல, இவர் தேவனுடைய வார்த்தையை அளிக் கும் போது, இங்குள்ள நீங்கள் அவரைத் தாங்கி வருகிறீர்கள்.

80. **எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரி லொருவர் அன்புகூருங்கள்.**

**ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்**...

**பிசாசு என்ன கூறமுயன்றாலும் சரி! நீங்கள் எல்லாரும் ஒரு பெரிய இனிய கூட்டமாயிருந்து வருகிறீர்கள்.**

**ஆனால் என் எச்சரிக்கையை ஞாபகம் கொள்ளுங்கள். பாருங்கள், சாத்தான் உங்களை அவ்விதம் விட்டு வைக்கமாட் டான், இல்லை ஐயா ! அவன் எல்லாவித அம்புகளையும் எய்வான்.**

யாரையாவது ஒருவரை அவனுடைய கையாளாக வைத்துக் கொள்வான். குற்றம் கண்டுபிடிப்பவர் யாரையாகிலும் அல்லது ஒரு அவிசுவாசியை அவன் உள்ளே நுழைத்து, மெதுவாக உங்களுடன் ஐக்கியங்கொள்ளச் செய்து, அவனுக்குள் விஷத்தை திணிப்பான். அந்த மனிதன் விஷத்தை சபையில் நுழைக்கத் தொடங்கு வான்.

அப்படிப்பட்ட எதனுடனும் நீங்கள் சேராதீர்கள்.

அதனுடன் நீங்கள் எவ்விதத் தொடர் பும் கொள்ள வேண்டாம்.

**நீங்கள் ஒருவரோடொருவர் இனிமை யாக இருந்து, ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்து தயையுள்ளவர்களாக இருங்கள்.**

விஷத்தைத் திணிக்கும் அந்த மனிதன் அல்லது ஸ்திரீ - அது யாராயிருந்தாலும் அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டு மென்று அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காக ஜெபித்து, ஒருவரோடு ஒருவர் ஒட்டிக்கொள்ளுங்கள்.

81. **உங்கள் போதகருடன் தரித்து நில்லுங்கள். அவர்தான் உங்கள் மேய்ப்பன்.**

**அவருக்கு எல்லாவித மரியாதையும் செலுத்துங்கள். அவர் உங்களை வழிநடத் துவார். ஏனெனில் அதற்கென அவர் தேவ னால் நியமிக்கப்பட்டிருக்கிறார். பாருங்கள்?**

82. நான் கூறுவதை கவனம் வைத்து கொள்வீர்களா? (சபையார் "ஆமென்"

என்கின்றனர் - ஆசி) **சத்துரு வருவான். அவன் வரும்போது நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாக பிணைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய சத்துருவான பிசாசினால் உபயோகிக்கப்படும் அந்த மனிதன் உங்களை விட்டுப் போய் விடுவான்; அல்லது உங்களில் ஒருவனாக ஆகிவிடுவான். அவ்வளவுதான்.**

83. **நீங்கள் ஒரு தனிக்குழுவாக ஆக்கிக் கொள்ளாதீர்கள், அல்லது - அல்லது கலந்து பேசி உங்களையே ஒரு தனக் குழுவாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். நாம் அனைவரும் ஒருவரே.** நான், 'இடது கையே, உன் மேல் நான் கோபமாயிருக் கிறேன். நீ வலது கையாயில்லாதபடியால், உன்னை சரீரத்திலிருந்து அகற்றிவிடப் போகிறேன்'' என்று கூறமுடியாது. அது என் இடது கை. அதனுடைய இடத்தில்

அது இருக்க வேண்டுமென்றே நான் - நான் விரும்புவேன். என் விரலின் நுனிகளும் கூட அதனதன் இடத்தில் இருக்க வேண்டுமென்றே நான் விரும்பு வேன் - அவ்வாறே சரீரத்தின் சிறு அவயவங்களும் கூட. அது போன்று, விசுவாசிகளின் சரீரமாகிய நாம் ஒருவருக் கொருவர் இணைந்து, ஒருவரோடொருவர் சரியாக இருந்து, நமது இடத்தில் பொருத்தப்பட வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார்.

84. இப்பொழுது அதைக் குறித்த ஒலிநாடாக்கள் உங்களிடம் இருக்கின்றன. நாம் விசுவாசிக்கும் போதகங்களின் ஒலிநாடாக்கள் உங்களிடம் உள்ளன. சபையில் கடைபிடிக்க வேண்டியதைக் குறித்த ஒலிநாடாக்களும் உங்களிடம் உள்ளன - நாம் தேவனுடைய சபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும்,

நாம் எவ்விதம் இங்கு ஒன்று கூடி உன்னதங்களில் ஒருமித்து உட்கார வேண்டும் போன்றவை.

**நீங்கள் வீட்டில் தங்கிவிடவேண்டாம். தேவன் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வாரானால், உங்கள் சகோதரருடன் ஐக்கியங்கொள்ள, இக்கூடாரத்தின் கதவுகள் திறக்கும் வரைக்கும் உங்களால் காத்திருக்க முடியாது. அத்தகைய உணர்ச்சி உங்களில் இல்லையென்றால், நீங்கள் ஜெபத் தில் தரித்திருக்க வேண்டிய நேரம் இதுவே என்று உங்களிடம் கூற விரும்புகிறேன்.**

85. ஏனெனில் நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். வேதாகமானது உயர்த்தினது . . . **இந்நாட்களில் "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கி றோமோ அவ்வளவாய் நாம் ஒருவரி லொருவர் அந்த திவ்விய அன்பில் -**

கிறிஸ்தவ அன்பில் - அன்பு கூர்ந்து, நாம் சபை கூடி வந்து கிறிஸ்து இயேசுவுக்குள் அவரோடு கூட உன்னதங்களில் உட்காரு வோம்'' "நீங்கள் ஒருவரிலொருவர் அன் புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்". அது உண்மை, நீங்கள் ஒற்றுமையாக இருங்கள்.

86. சகோதரன் அல்லது சகோதரி யாராகிலும் தவறு சிறிது செய்துவிட்டனர் என்று நீங்கள் நினைத்தால், 'ஆண்டவரே, கசப்பான வேர் முளைத்தெழும்ப அனுமதிக்க வேண்டாம். ஏனெனில் அது அவரையும் பாதிக்கும், என் வாழ்க்கையிலிருந்தும் அது கிறிஸ்துவை எடுத்துப் போடும்" என்று ஜெபியுங்கள்.

குரோதம், விரோதம், பகை என்னும் விஷ அமிலம் உங்களிடமிருந்து பரிசுத்த

**ஆவியை எடுத்துப் போட்டு விடும். அது அவரை இந்த கூடாரத்திலிருந்து ஓட்டி விடும். அது தேவனுடைய ஆவியை அழித்துவிடும். இல்லையேல் அதை உங்களைவிட்டு ஓட்டி விடும். உங்கள் போதகரின் மனதை அது புண்படுத்தும். அது எல்லாவற்றையும் செய்துவிடும். பாருங்கள்? நீங்கள் அப்படி செய்ய வேண்டாம்.**

87. நீங்கள் அவ்வளவுக்கவ்வளவு அருகில் வாருங்கள். உங்கள் கொக்கியை (Buckle) எடுத்துக் கொள்ளுங்கள் - அன்றிரவு அந்த சகோதரன் (போதகர்) கொக்கியைப் பெற்றுக் கொண்டதாக தரிசனம் கண்டார் என்று சாட்சி கூறினது போல, அந்த கொக்கியை தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை மாட்டிக் கொள்ள உதவி செய்யும். அதை தரித்துக் கொண்டு,

இறுக்கிக்கொண்டு, ஒருவருக்கொருவர் அருகில் வாருங்கள். ஒருவரைக் குறித்து ஒருவர் நல்லதை மாத்திரம் பேசுங்கள், மற்றவரைக் குறித்த நல்ல காரியங்களை மாத்திரம் கூறுங்கள், அப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.



# ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-08-29 சாத்தானின் ஏதேன்

193. உங்கள் இருதயத்தில் பாவம் ஏதாவது குடிகொண்டிருந்தால், உங்கள் இருதயத்தில் தவறு காணப்பட்டால், அல்லது வேறெதாவது இருந்தால், தேவ னிடத்தில் மன்னிப்பு கோருங்கள். எனக்காக நீங்கள் ஜெபியுங்கள், நானும் உங்களுக்காக ஜெபிப்பேன். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக! என்பதே வேண்டுகோளாயிருக்கிறது.

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!

தேவன் உங்களோடிருப்பாராக நாம் மறுபடியும் சந்திக்கும் வரை

194. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூருகின்றீர்களா? (சபையார் "ஆமென்" என்கின்றனர்- ஆசி) சிறு பிள்ளைகளே,

ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்று யோவான் போதித்தான். ஒருவரி லொருவர் அன்புகூருங்கள். ஏனெனில் அன்பு திரளான பாவங்களை மூடும், நாம் ஒருவரோடொருவர் கைகுலுக்குவோம்,

தேவன் உங்களோடிருப்பாராக நாம் மறுபடியும் சந்திக்கும் வரை!

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!

195. ஒருவரிலொருவர் பட்சாமாயிருங் கள். எல்லோரிடமும் பட்சமாயிருங்கள். உங்கள் அயலாரை சரிவர நடத்துங்கள். இயேசுவின் வருகை வரைக்கும் மாசற்ற வராய் இருங்கள்.

... பாதத்தண்டை; நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை! தேவன் உங்களோடிருப்பாராக நாம் மறுபடியும் சந்திக்கும் வரை!


“இதோ சகோதரர் ஒருமித்து வாசம்
பண்ணுகிறது எத்தனை நன்மையும்
எத்தனை இன்பமுமானது” (சங். 133:1)
என்று சங்கீதக்காரன் கூறியது போல,
நீங்கள் தனியே வந்து இவ்வாறு ஒன்று
கூடியுள்ளதை நினைத்துப்
பார்க்கும்போது!
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-10-31 M மறுரூபப்படுத்தும் வல்லமை

இந்த பையன்களை நான் நேசிக்கிறேன். நான் அவர்களுடன் இருக்கத்தக்கதான ஒரு நிலையில் அவர்களை வைக்க வேண்டுமென்று விரும்பினேன். அவர்கள் ஒலிநாடாக்களை பதிவு செய்ய ஆரம்பித்தனர். ஆனால், பாருங்கள், என்னைப் பொறுத்த வரையில், எனக்குத் தெரிந்த வரையில், அவர்கள் இன்னும் ஒலி நாடாக்களைத் தயாரித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

ஒலிநாடாக்களை தயாரிப்பதைக் காட்டிலும் மகத்தான காரியத்தை தேவன் அவர்களுக்குச் செய்திருப்பதைப் பாருங்கள். அறிவுள்ள எவருமே ஒலிப்பதிவுக்

கருவியை இயக்கி, ஒலி நாடாக்களைம் தயாரித்து விற்க முடியும்.

**ஆனால் இன்று காலை கூடியுள்ளது போன்ற சிறு கூட்டத்தை இசைவாயும் ஒற்றுமையாகவும் வைத்து, அவர்கள் செய்தியை இன்னும் பற்றிக் கொண்டிருக்கச் செய்வதற்கு பரிசுத்த ஆவியின் வழிநடத்தல் அவசியமாயுள்ளது.**

17. **தேவனே, இம்மக்களுக்கு இவ்வுல கில் நீண்ட ஆயுளையும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அளித்து, பாதையின் முடிவில் எஜமானின் சந்தோஷத்திலே பிரவேசிக்க அருள்வீராக.**

18. நாம் ஒரு போருக்கு இப்பொழுது ஆயத்தமாயிருக்கிறோம், எக்காளம் தொனிக்கப் போகின்றது, பாடல்கள் பாடப்பட்டாயிற்று, இப்பொழுது வார்த்தை வருகிறது. நான் இங்கு நின்று கொண்

டிருக்கும் இந்நேரத்தில், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்று அறிந்திருக்கிறேன். ஆம், ஒருக்கால் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

19. இங்குள்ள இந்த இளம் வீரர்கள் கூறின விமரிசனங்களைக் கேட்கும் போது! எனக்கு வயதாகிக் கொண்டு வருகிறது. உங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையை யும், தேவனால் எனக்களிக்கப்பட்ட இந்த செய்தியை நீங்கள் விசுவாசிப்பதற்கென உங்களை எந்த நிலையில் வைத்திருக்கிறீர்கள் என்று நான் சுற்றிலும் கேள்விப் பட்டு வருகிறேன். நீங்கள் எல்லோரும் வராமலிருந்தால் இச்செய்தியினால் ஒரு பயனும் இல்லை. பாருங்கள், அதை விசுவாசிக்க யாராகிலும் இருக்கவேண்டும். அது தேவனிடத்திலிருந்து வரும் வரைக்கும் அதை விசுவாசிக்க யாராகிலும் இருப்பார்கள். தேவன் ஒரு வழியை வகுத்துக் கொடுத்துள்ளார். அவர் தமது மகத்தான

வழியை இவ்வாறே தீர்மானித்துள்ளார். அதாவது அவர் ஒன்றை அனுப்புவா ரானால், அந்த ஒன்றை சந்திக்க ஏதாவதொன்று அங்கிருக்கும். ஆழத்தின் அழைப்புக்கு ஆழம் செவி கொடுக்கிறது. அவ்வாறு தான் அது இருக்கவேண்டும்.

20. இன்று காலை சகோ.ஜீன் செய்த ஜெபத்தில் உபயோகித்த அவருடைய கம்பீரமான பிரகாரங்களில் ' என்னும் சொற்கள் எனக்குப் பிரியம். நான் அங்குள்ள பாலத்தைக் கடந்து, தேவனுக்கு பயபக்தியும் மரியாதையும் செலுத்தும் இடத்துக்கு வரும்போது, அதே விதமான உணர்ச்சி எனக்கு உண்டாகின்றது. அந்த உணர்ச்சியை நான் எப்பொழுதும் கொண்டவனாயிருக்கிறேன். சத்துரு என்ன செய்த போதிலும்

21. **இதை ஞாபகம் கொள்ளுங்கள், மறந்து போகாதீர்கள். முக்கியமாக, சகோ. லீயோ, ஜீன் இருவரும். இது இவ்விதமாகவே எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து செல்ல சாத்தான் அனுமதிப்பான் என்று நினைக்கி றீர்களா? ஓ, இல்லை. அவன் நிச்சயமாக அனுமதிக்க மாட்டான். இந்நாட்களில் ஒன்றில் அவன் சுழற்காற்றைப் போல் பறந்து வருவான். ஆனால் வெள்ளம் போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார் (ஏசா. 59:19).**

**தேவனுடைய சமுகத்தில் உங்கள் ஜெபத்தை ஏறெடுத்துக் கொண்டிருங்கள். ஒருவரையொருவர் இறுகப் பற்றிக் கொள் ளுங்கள். தேவனைப் பிடித்துக் கொள் ளுங்கள்.**

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தால், நீங்கள் தேவனிடம் அன்பு கூருகிறீகள் என்பதை அது காண்பிக்கிறது... "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்"** (யோவான் 13:35).

22. சிறிது முன்பு நான், "எவ்வளவு அழகாக பாடுகின்றனர்! என்ன நேர்த்தியான குரல்! ஆண்களும், பெண்களும், கணவரும் மனைவியரும், இளைஞரும், முதியோரும், நடுத்தர வயதுள்ளவர்களுமாய் இங்கு அமர்ந்திருக்கும் எவ்வளவு அருமையான கூட்டம்! இவர்கள் பிரஸ்காட் வானொலி ஒலிபரப்பில் பாட வேண்டியவர்கள்" என்று எண்ணினேன். ஆனால் பாருங்கள், இந்த இளைஞரை தேவன் அதை செய்வதற்கென்று அழைக்கவில்லை. பாருங்கள்? பாருங்கள்?

மணவாட்டி வெளியே அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள், பாருங்கள், வெளியே அழைக்கப்படுகிறாள். இங்குள்ள என் ஊழியம், வெளியே அழைத்தலே. நீங்கள் குடியிருப்பு ஒன்றை அமைத்துக் கொண்டு அங்கு வசித்து, உங்கள் பிள்ளைகளை வளர்க்க விரும்புகிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும், கழுகு தன் குஞ்சுகளை கவனிப்பது போல், கவனித்து வருகின்றீர்கள். நீங்கள் ஏதா கிலும் தவறைக் காண்கையில், அந்த நபரை தனியே அழைத்து அதற்காக ஜெபிப்பது போன்ற காரியங்களைச் செய் கிறீர்கள். பரிசுத்த ஆவியானவர் வருகை தரும் ஸ்தலமாக இருக்கத்தக்கதாக, அதை தூய்மையாயும் பரிசுத்தமாயும் வைத்திருங் கள்.

23. **தேவன் ஆராதிக்கப்பட விரும்புகி றார். நீங்கள் அவரை ஆராதிக்கும்போது,**


**நாம் பாடுவது போல் ஒரு பாடலைப் பாடாமல், ஆராதனையின் ஆவியில் பாட வேண்டும், பாருங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் திரும்ப விழுவதை நீங்கள் உணருவீர்கள்.**

24. இங்குள்ள வாலிபனை நான் காணும்போது, அந்நாட்களில் இளைஞர் கள் இவ்விதமாக அமர்ந்திருந்ததையும், இங்கு இளைஞர்கள் தங்கள் மனைவி களுடன் அமர்ந்துள்ளதுபோல் அன்றும், அவர்கள் அமர்ந்திருந்து, அந்த திடகாத்திர மானவர்கள் குழந்தைகளைப்போல் கதறி அழுததையும் நான் நினைவுகூருகிறேன் .

25. இந்த நாளில் என்னவென்று பாருங்கள். அவர்கள் விபச்சாரத்திலும், உலகத்தின் அசுத்தத்திலும் ஜீவித்து, தெருவில் சுற்றுபவராயிருக்கின்றனர்.

26. "**இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங். 133:1) என்று சங்கீதக்காரன் கூறியது போல, நீங்கள் தனியே வந்து இவ்வாறு ஒன்று கூடியுள்ளதை நினைத்துப் பார்க்கும்போது !** அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடிகளில் வடிகிறதும் அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான அபிஷேகத் தைலத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அந்த அபிஷேகத் தைலம்... அந்த அபிஷேகத் தைலம் என்ன செய்ததென்று அறிவீர்கள். அவன் தேவனுடைய சமூகத்திற்கு சென்றபோது, அது அவனை பாதுகாத்தது. பாருங்கள், அவன் தேவனுடைய சமூகத்திற்கு, செல்லும் முன்பாக, அந்த எண்ணெயால் அபிஷேகிக்கப்பட வேண்டும். சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுதல் அந்த

எண்ணெய்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது. சகோ தரர் ஒருமித்து வாசம் பண்ணும் அந்த அபிஷேகத்துடன், நாம் கர்த்தருடைய சமுகத்தில் பிரவேசிக்கிறோம். எண்ணெய் பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது.



அவர்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருந்தனர். நீங்கள் இப்பொழுது இனிமேலும் அதைக் காணமாட்டீர்கள். அதெல்லாம் ஏறெக்குறைய மறைந்து போய் விட்டது, அன்பு. சகோதரனே, உங்களுக்குத் தெரியும், அது பயங்கரமாக இல்லையா? ஜனங்கள் இனிமேலும் ஒருவர் மற்றவருக்காக அக்கறை கொள்வதில்லை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-06-07A கிறிஸ்துவின் ஊழியம்

28. இப்பொழுது கவனியுங்கள், மரியாள் கிழக்கத்திய மாதிரியின்படியாக தன்னுடைய தலையில் தண்ணீரை சுமந்தபடி, அந்த சுத்தமான நீரூற்றுகளிலிருந்து வீட்டிற்கு வருவதை என்னால் காண முடிகிறது, அவள் தெருவில் போய்க் கொண் டிருக்கிறாள், எல்லாருமே - தெருவில் யாருமில்லை. அவள் அந்தச் சந்தின் வழியாகக் கடந்து போயிருக்கலாம், அவள் அங்கு தான் வசித்து வந்தாள், அதன் ஓரத்தில் ஒரு சிறு குடிசை இருந்திருக்கலாம்: அவள் மிகவும் ஏழையாகவும், விதவையாயிருந்த தன்னுடைய தாயுடனும் வாழ்ந்து வந்தாள். துணிகளைத் துவைக்கும் நாளாகிய இந்தத் திங்கள் கிழமையில், அவள் பாதையில்

நடந்து கொண்டிருந்தாள், ஆனால் அவள் ஒரு கன்னிகையாயிருந்தாள். அந்தப்பட்டணம் எவ்வளவு அருவருப்பானதாக (பாவம் நிறைந்ததாக) இருந்தாலும் காரியமில்லை, அவள் ஒரு கன்னிகையாயிருந்தாள்; அவள் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தாள். திடீரென்று ஒரு மகத்தான வெளிச்சம் அவளுக்கு முன்பாகத் தோன்றியது. இந்த வெளிச்சத்தின் கீழாக நின்று கொண்டிருந்தது பிரதான தூதனாகிய காபிரியேலாக இருந்தது (அல்லேலூயா.) ஆமென். அது உங்களை பயப்படுத்தும்படி அனுமதிக்க வேண்டாம், "ஆமென்" என்பதற்கு, "அப்படியே ஆகக்கட வது" என்று அர்த்தமாகும். சரி, அந்த பிரதான தூதன் அங்கே நின்று கொண்டு, "வாழ்க மரியாளே, ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ தேவனுடைய பார்வையில் கிருபை பெற்றிருக்கிறாய்" என்றான்.

29. ”என்ன? தேசத்திலேயே மிகவும் கீழ்தரமான பட்டணத்தை சேர்ந்தவளாகிய நானா? இங்கே இந்தச் சந்திற்குப் பின்னால் ஜீவித்துக் கொண்டிருக்கும் ஏழையான சிறு வயது பெண்ணாகிய நானா? இருப்பினும் நான் தேவனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறேனா?” “ஆம், நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்” என்றான்.

இத்தூதனுடைய வாழ்த்துதல், அந்த சிறு கன்னிகையை திகிலடையச் செய்தது, ஒரு ஒளி அவன் மேல் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் அந்த வெளிச்சத்தில் நின்று கொண்டு, “வாழ்க” என்றான். அது உங்களை பயமடையச் செய்யும். அது யாரையுமே பயமடையச் செய்யும்.

இப்பொழுது, அவர் அவளிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, அவரை நோக்கிப்பார்க்கவும், அவரைக்

கவனிக்கவும் நான் விரும்புகிறேன். அவன், “நீ தேவனிடத்தில் மிகவும் கிருபை பெற்றிருக்கிறாய், நீ ஒரு பிள்ளையைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக” என்றான்.

“ஏன்,” அவள், “இந்தக் காரியங்கள் எப்படியாகும்?” என்றாள்.

“பரிசுத்த ஆவி உன்மேல் நிழலிடும். (ஆமென்.) உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்” என்றான். இப்பொழுது, ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? தேவன் ஒரு ஆவியாயிருக்கிறார்.

சிறிது காலத்திற்கு முன்னால், நான் ஒரு நபரிடம் பேசிக்கொண்டிருந்தேன், அவர், “பிரசங்கியாரே, அது சத்திய மென்று நீர் உண்மையாகவே விசுவாசிப்பதில்லையா?” என்று கேட்டார்.

“ஆம், நான் விசுவாசிக்கிறேன்” என்று சொன்னேன்.

30. அவர், “இப்பொழுது, கவனியும், அது சற்று முட்டாள் தனமாக இருக்கிறதே, யோசேப்பு இந்த ஸ்திரீயுடன் - அந்த பெண்ணுடன் போய்க் கொண்டிருந்தான்” என்றார். அவன் மனைவியை இழந்தவன், அவனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர், “இப்பொழுது, கவனியும், அவன் அந்த ஸ்திரீயோடு கூடபோய்க் கொண்டிருந்தான். அங்கே சற்று தவறாயுள்ளது என்று நம்புகிறேன், இல்லையா?” என்றார்.

நான், “இல்லை, ஐயா. அவர் பரிசுத்தமான தேவகுமாரனாயிருந்தார், அவர் கன்னிப் பிறப்பின் மூலம் பிறந்தார் என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றேன்.

“அது எங்ஙனம் இருக்கக்கூடும்?” என்று கேட்டார்.

31. அந்த மனிதனுக்கு தேவனிடத்தில் விசுவாசமில்லை என்பதைக் காண்கிறோம். மேலும் அவர், "சகோதரன் பிரன்ஹாமே, அது எல்லா விஞ்ஞான விதிகளுக்கும் மாறுபட்டுள்ளது; அது அவ்வாறு சம்பவித்திருக்க முடியாது. கவனியும், கோதுமையானது மகரந்த சேர்க்கை நடைபெறாவிட்டால் அது வளராது, சோளமும் அவ்வாறே வளராது. ஆண் பெண் இருவருமே இல்லாமல் எதுவுமே தன்னைத்தானே பிரதியுற்பத்தி செய்ய முடியாது. ஒரு மரம் கூட நடப்பட்டு, மாறுதலடையவும் மற்ற காரியங்கள் சம்பவிக்கவும் வேண்டியுள்ளது. தேனீக்கள் ஆண் மற்றும் பெண்ணை உண்டாக்கும்பொருட்டு, ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மகரந்த சேர்க்கையைக் கொண்டுவருகிறது, அல்லது அவைகள் வளராது. அது எல்லா விஞ்ஞான விதிகளுக்கும் எதிரானது" என்றார்.

நான், “ஆனால் இது விஞ்ஞானத்தையே சிருஷ்டித்தவரான தேவனாயுள்ளது” என்றேன்.

அவர், “அது அவ்வாறு இருக்க முடியாது” என்றார்.

நான், “நான் ஒரு காரியத்தை உம்மிடம் கேட்க விரும்புகிறேன். தேவன் ஒருவர் உண்டென்று நீர் விசுவாசிப்பதில்லையா?” என்று கேட்டேன்.

அவர், “இல்லை, ஐயா. எந்த கன்னிப்பிறப்பிலும் எனக்கு விசுவாசமில்லை; எப்பொழுதுமே அப்படிப்பட்ட காரியம் இருந்தது மில்லை, ஒருபோதும் இருக்கப்போவதுமில்லை, நான் அதை விசுவாசிப்பதில்லை. அந்த மனிதராகிய யோசேப்பு தான் அவருடைய தகப்பனாக இருந்தார்” என்றார்.

32. நான், “நான் ஒரு காரியத்தை உம்மிடம் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அது ஒரு மனிதனைப்

பொறுத்த வரையில் முற்றிலும் கூடாத காரியம் என்றும் மகத்தான சிருஷ்டிகரான தேவனுக்கு... அது முழுவதும் கூடாத காரியம் என்றும் என்னிடம் கூற விரும்புகிறீரா?" என்றேன்.

அவர், "அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியம் கிடையாது" என்றார்.

நான், "கவனியும், சற்று என்னைப் பின்தொடர்ந்து வாரும். இந்தக் குழந்தையைக் கொண்டு வருவது சிருஷ்டிகரான தேவனால் கூடாத காரியம் என்று நீர் நம்புகிறீர். அவர் ஒரு பூமிக்குரிய தாயைக் கொண்டிருந்தார் என்று நீர் ஒப்புக் கொள்கிறீர், நானும் கூட அதை ஒப்புக் கொள்கிறேன். நல்லது, ஆனால் அவருக்கு பூமிக்குரிய ஒரு தகப்பன் இல்லாவிட்டால், ஒரு குழந்தையைக் கொண்டு வருவது, அவரில்லாமல் கூடாத காரியமாகும்" என்று கூறினேன். அவர், "அது சரியே" என்றார்.

33. நான், “அப்படியானால் உம்மிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், தகப்பனோ தாயோ இல்லாமல் முதலாவது மனிதன் எப்படி இங்கே வந்தான்? அவன் தலைப்பிரட்டையாகவே (தவளையாக வளர்ச்சியடையும் நீண்ட வால் கொண்ட உயிரி - மொழிபெயர்ப்பாளர்.), தவளைக் குஞ்சாகவோ, குரங்காகவோ, நீங்கள் அவனை அழைக்க விரும்புகிறபடி எதுவாகவோ இருக்கட்டும், அவன் எப்படி இங்கே வந்தான்? நீர் கூறினபடி, அவன் தகப்பன் தாய் இருவரையும் கொண்டிருக்க வேண்டுமே” என் றேன். அது சரியே. நான், “அவனுடைய தகப்பனும் தாயும் யார்?” என்று கேட்டேன்.

இந்நாளுக்கு அவர் எனக்கு பதில் கூறவில்லை. அவரால் பதிலளிக்க முடியவில்லை. தேவன் இந்தப் பிள்ளையை உண்டாக்கினார். ஆம், ஐயா. ஆணிடமிருந்து இரத்த உயிர் அணு வருகிறது என்று நான் நம்புகிறேன். அது

உண்மை. நாம் அதை அறிவோம். இங்கேயிருக்கும் ஜனங்களாகிய உங்களில் அநேகர் விவசாயிகளாய் இருக்கிறீர்கள். உங்களுடைய பெட்டைக் கோழி கோடை காலம் முழுவதும் முட்டையிடலாம். ஆனால் அவள் ஆணோடு (சேவல் கோழியோடு – மொழிபெயர்ப்பாளர்.) சேரவில்லையென்றால், அவைகள் ஒருபோதும் குஞ்சு பொரிக்காது. அது சரியே.

இப்பொழுது, பறவைகள் தங்களுடைய கூட்டைக் கட்டி - தாய்ப் பறவை வெளியே மரத்தில் ஒரு கூட்டைக் கட்டி, கூடு முழுவதுமாக முட்டைகளையிட்டு, அதைச் சுற்றிலும் ஆண்பறவை இல்லையென்றால், அவள் கூட்டில் உட்கார்ந்து, அந்த முட்டைகளை அடைகாத்து, அம்முட்டைகளை மீண்டும் மீண்டும் திருப்பிப் போட்டு, அவளால் பறப்பதற்கு கூட முடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையையடைந்து,

கூட்டை வெதுவெதுப்பாக வைத்துக் கொள்கிறாள். ஆனால் அவள் ஆண் பறவையுடன் சேரவில்லையென்றால், அவைகள் கூட்டிலேயே கிடந்து அழுகிப் போகும். அவைகள் பொரிக்காது. ஏனெனில் ஜீவ கிருமி ஆணிடமிருந்தே வருகிறது.

34. இங்கே சுற்றிலும் நீங்கள் பெற்றிருக்கிற, இந்தப் பழைய குளிர்ந்து போன சடங்காசாரமான சபைகளில் சிலவற்றை அது என் ஞாபகத்தில் கொண்டு வருகிறது: கூடு நிறைய முட்டைகளைக் கொண்டிருக்கின்றனர், நீங்கள் அப்படியே அந்த டீக்கன்மார்களை அழைத்து, சுற்றிலுமுள்ள அவர்களிடம் கலந்து ஆலோசிக்கலாம்...?... அந்தக் கூட்டைக் கிழித்துப் போட்டு வேறு ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்ளுவது மிகவும் நல்லது. அவர் களுக்கு தெய்வீக சுகமளித்தலில் விசுவாசமில்லை; அவர்களுக்கு தேவனிடத்தில்

விசுவாசமில்லை. ஜீவனுடைய தொடுதலைப் பெற அவர்கள் அந்த ஆணோடு ஒருபோதும் சேர மாட்டார்கள், அது சரியே. அதுவே சத்தியமாயுள்ளது. அந்தக் கூட்டை வெளியே எறிந்து விட்டு, மீண்டும் தொடங்குவது நல்லது. அது சரியே. எவ்வளவு டீக்கன்மார் இருக்கிறார்கள் என்பது காரியமில்லை, நீங்கள் அவனை மெருகூட்டி, இது, அது அல்லது மற்றது என அவனை அழைத்து, அல்லது முதுகில் தட்டிக் கொடுத்து, அல்லது சபை புஸ்தகத்தில் அவனுடைய பெயரை எழுதுகிறீர்கள், அவர்கள் மறுபடியுமாக பிறக்கும் மட்டும், இன்னும் பாவத்திலும் அக்கிரமங்களிலும் மரித்தவர்களாயிருக்கின்றனர். ஆம், ஐயா. அது உண்மை.

35. இப்பொழுது திரும்பவும் கவனியுங்கள், துரிதமாக. பிதாவாகிய தேவன், ஆவியானவர் அந்த சிறு கன்னிகையின் மேல் நிழலிட்டு,

சகலத்தையும் சிருஷ்டித்த பிதாவாகிய தேவன் இரத்த உயிரணுவை அந்த கருப்பையில் – அந்த ஸ்திரீயினுடைய கருப்பையில் உண்டாக்கி, கிறிஸ்து இயேசுவாகிய குமாரனை கொண்டு வந்தார், அவரே பூமியில் தேவனுடைய கூடாரமாக இருந்தார். ஆமென்.

அப்படியானால் நாம் மாம்சீக உறவின் இரத்தத்தினால் (sexual blood) இரட்சிக்கப்படவில்லை, ஆனால் நாம் சிருஷ்டிக்கப்பட்ட இரத்தத்தினால் – தேவனுடைய சொந்த இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தம் அவரே. அதன் காரணமாகத்தான் நான் இரட்சிப்பிலும் தெய்வீக சுகமளித்தலிலும் விசுவாசம் கொண்டுள்ளேன், ஏனெனில் கல்வாரி சிலுவையில் அவருடைய குமாரனுடைய இரத்த நாளங்களிலிருந்து ஊற்றப்பட்டது தேவனுடைய சொந்த

இரத்தமாக இருந்தது. ஆமென். அதன் காரணமாகத்தான் நாங்கள் எதிர்ப்புகளை எதிர் கொண்டு நின்று, "அதுதான் சரி!" என்று கூற முடிகிறது. நீங்கள் அடிப்படை சத்தியங்களுக்கு திரும்பிச் சென்று, அது என்னவென்று கண்டு கொள்வீர்களானால், நீங்கள் எங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள். நாம் தேவனுடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக் கிறோம்.

36. இப்பொழுது, இந்தச் சிறு கன்னிகை முழுவதுமாக பரவசமடைந்தாள். கவனியுங்கள், இங்கே உள்ள காரியம் தான் நான் மரியாளைக் குறித்து விருப்பம் கொள்ளச் செய்கிறது. ஆமென். சகரியாவைப் போல, அந்தப் பிரசங்கியாரைப் போல சந்தேகப்படுவதற்குப் பதிலாக, அவள், "இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்றாள்.

அவன் செய்ததைப் போல, அவள் அதெல்லாவற்றையும் புரிந்து கொள்ளும்படி முயற்சிக்கவில்லை. அவன், “எப்படியாகும், இப்பொழுது, கவனியும், என்னுடைய மனைவி வயது சென்றவள்” என்று கூறினான், இதைப் போன்ற மற்றவைகளைக் கூறினான். நம்மிடம் ஏராளமான திருஷ்டாந்தங்கள் உள்ளன. ஆலயத்திலிருந்த ஆகாரைக் கவனியுங்கள். மேலும் சாராளைக் கவனியுங்கள். அநேக பண்டைய கால ஸ்திரீகள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தங்கள் மேல் வந்ததன் காரணத்தால் தான் (பிள்ளை களைப் பெற்றனர்) பிள்ளைகளைக் கொண்டிருந்தனர். நம்மிடம் ஏராளமான திருஷ்டாந்தங்கள் உள்ளன. ஆனால் அவன் – ஒருபோதும் சம்பவித்திராத ஏதோவொன்றை அவள் விசுவாசிக்க வேண்டியிருந்தது.

நல்லது, மரியாளைக் குறித்து நான் விரும்புவது இங்கே தான் உள்ளது. அவள்

ஜீவனை உணரும் முன்பே, எந்த உடல் சார்ந்த வெளிப்படையான உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு முன்பே, அவளுடைய சரீரத்தில் ஒரு காரியம் நிற்பதற்கு முன்பே, அவள் ஜீவனையோ அல்லது எதையுமோ உணருவதற்கு முன்பே, அவள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப்போகிறாள் என்பதைக் குறித்து சாட்சி கூறத் தொடங்கினாள். அல்லேலூயா. தேவனை அவருடைய வார்த்தையில் எடுக்கும் இன்னும் அதிக மான சில மரியாள்களை தேவன் நமக்கு அருளுவாராக. தேவன் தம்முடைய தூதன் மூலமாக அவ்வாறு கூறியிருந்தார், வேறு ஒவ்வொரு காரியமும் நடந்தாலும் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை, அவள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாள், ஏனெனில் அவள் தேவனை அவருடைய வார்த்தை யில் எடுத்தாள். ஆமென்.

37. இந்தப் பிற்பகல் வேளையில் இங்கே இந்தச் சபையில் நாம் அம்மாதிரியான ஜனங்களைக் கொண்டிருந்தோமானால், இங்கே நம் மத்தியில் ஒரு வியாதிப்பட்ட நபரும் இருக்க மாட்டார்கள். தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்து களிகூரத் தொடங்குங்கள்.

அவள் சுற்றிலும் சென்று ஒவ்வொருவரிடமும், “ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறேன்” என்று கூறிக் கொண்டிருந்தாள்.

“உனக்கு குழந்தை இருக்கப்போகிறது என்று எப்படி உனக்குத் தெரியும்?”

“தேவன் அவ்வாறு கூறினார்.”

ஒரு கன்னிகை... அல்லேலூயா. ஆமென். நான் அதை விரும்புகிறேன். சரி. அவள் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்து களிகூரத் தொடங்கினாள். அவளால் பொறுமையாக

அமைதியாக இருக்க முடியவில்லை; அவள் யாரோ ஒருவரிடம் சென்று அதை சொல்ல வேண்டியிருந்தது. தேவனுடன் எப்பொழுதாவது தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவரும் வேறு யாரிடமாவது அதைச் சொல்ல வேண்டும். ஆம், ஐயா.

அவள் தொலைதூரத்துக்குப் போனாள். எலிசபெத்தைக் குறித்து தூதன் அவளிடம் கூறினான். எலிசபெத்து அவளுடைய நெருங்கிய இனத்தாளாயிருந்தாள் (first cousin). அவள் எலிச பெத்தைக் காண போக வேண்டியிருந்தது. எனவே நாசரேத்து தெருக்களின் வழியாக யூதேயாவுக்குள் சென்று, அவளுக்கு சம்பவிக்கப் போவதைக் குறித்து எலிசபெத்திடம் கூறும்படியாக அவளைக் காண மேலே அந்த மலை தேசத்திற்குப் போனாள். எனவே எலிசபெத்து ஏற்கனவே தாயாகியிருக்கிறாள் என்பதை அவள் அறிந்திருந்தாள்; அவளுடன் ஆறு

மாதங்கள் இருந்தாள். இவ்வாறாக அவர்கள் ஒன்றாக மகிழ்ச்சியான நேரத்தைக் கொண்டிருக்கின்றனர்.

38. இப்பொழுது கவனியுங்கள், மரியாள் எலிசபெத்தை சந்திக்கும்படி வருவதை என்னால் காண முடிகிறது, அவளை சந்திக்கும்படி எலிசபெத்து வெளியே வருகிறாள். அவள் வருவதை இவள் கண்டாள், இவள் ஓடிச் சென்று தன்னுடைய கரங்களை அவளைச் சுற்றிலும் போட்டு, அவளைக் கட்டித் தழுவி, அவளை முத்தமிடத் தொடங்கினாள். அதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். "ஓ, எலிசபெத்தே, நான் உன்னைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்."

"மரியாளே, உன்னைக் காண்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி."

அந்த விதமாகத்தான் அவர்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்தினார்கள். அவர்கள்

ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருந்தனர். நீங்கள் இப்பொழுது இனிமேலும் அதைக் காணமாட்டீர்கள். அதெல்லாம் ஏறெக்குறைய மறைந்து போய் விட்டது, அன்பு. சகோதரனே, உங்களுக்குத் தெரியும், அது பயங்கரமாக இல்லையா? ஜனங்கள் இனிமேலும் ஒருவர் மற்றவருக்காக அக்கறை கொள்வதில்லை. ஏன், நாம் தேசத்தில் வெளியே இருந்த போது, நமக்கு பண்ணை நிலங்கள் இருந்தன, அப்போது அது வழக்கமாக இருந்தது, யாரோ ஒரு அண்டைவீட்டார் வியாதிப்படும் போது, ஏன், நாம் அங்கே சென்று அவர்களுடைய தானியத்தை கொய்து அல்லது – அல்லது அந்த மரத்தை வெட்டி அதை உள்ளே கொண்டு வந்து, அவர்களுக்கு ஒத்தாசையாய் இருக்கக்கூடிய எதையாவது செய்தோம்.

ஆனால் அவர்கள் இன்மேலும் அதைச் செய்ய மாட்டார்கள். உங்களுடைய

அண்டை வீட்டார் மரிப்பார்களானால், அதை நீங்கள் அறியக் கூடிய ஒரே வழி என்னவெனில், நீங்கள் செய்தித்தாளை வாசிப்பதன் மூலமே. உங்களுக்கு அதைக் குறித்து எதுவும் தெரியாது. சகோதர சிநேகம் முடிந்து விட்டது. அது சத்தியமில்லையா?

39. நான் அன்றொரு நாள் யாரோ ஒருவருடன் ஒரு பக்கமாக பயணம் செய்து கொண்டிருந்தேன். அங்கே தெருவில் ஒரு ஸ்திரீ போய்க் கொண்டிருந்தாள், அவள் என்னுடைய மனைவியை அறிந்து கொண்டாள். எனவே அவள், “ஹலோ” என்றாள்.

நான், “நீ அவளிடம் பேசினாயா?” என்றேன்.

அவள், “ஆம்” என்றாள்.

நான், “நீ பேசினதை நான் கேட்கவில்லையே” என்றேன்.

அவள், “நல்லது, நான் திரும்பிப் பார்த்து புன்னகை செய்தேன்” என்றாள்.

நான், “அது அதுவல்ல, அது கொஞ்சம் முட்டாள்தனமான அசட்டு சிரிப்பாக உள்ளது. நீ போய் கொண்டே, “ஹாய்” என்று சொல்லுகிறாய். நான் அதை விரும்பவில்லை” என்றேன்.

நான் இங்கே மியாமிக்கு ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தேன், சகோதரன் போஸ்வர்த், ஏதோவொரு கோமாட்டி (சீமாட்டி -பிரபு அல்லது சீமானின் மனைவி - மொழிபெயர்ப்பாளர்) (Duchess) அங்கே இருந்தாள், அவள் அங்கே கூடாரத்தின் சிறு தொங்கலுக்குப் பின்னால் இருந்தாள். சகோதரன் போஸ்வர்த், “சகோதரன் பிரன்ஹாமே, நாம் இவ்விடத்தைக் கொண்டிருக்கும்படி அனுமதியளித்த கோமாட்டி உம்முடைய கரங்களைக் குலுக்க விரும்புகிறாள்” என்றார்.

நான், “நல்லது இப்பொழுது, அவள் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவள் அல்லவே” என்றேன். பாருங்கள்? நான், “அவள் வெறுமனே ஒரு ஸ்திரீயாக இருக்கிறாள்” என்றேன்.

அவர், “நல்லது, அவள் – அவள் உம்மிடம் பேச முடியாதென்று நான் அவளிடம் கூறி விட்டேன், ஆனால் நாம் இதைப் போன்ற இடத்தின் வழியாகப் போவோமனால், நல்லது, அவள் உம்முடைய கரத்தைக் குலுக்கக் கூடும்” என்றார்.

நான், “நல்லது, அது உங்களைப் பொறுத்தது” என்றேன்.

40. இவ்வண்ணமாக, ஞாயிறு பிற்பகலில், பிரசங்க ஆராதனைக்குப் பிறகு, நான் அங்கே பின்னால் நடந்து சென்றேன், நீங்கள் ஒரு காய்ச்சலைத் தணிக்கும் மருந்துப் பெட்டியில் (aspirin box) வைக்கக்கூடிய போதுமான ஆடைகள்

அவளிடம் இருந்தன. மேலும் அவள்... இங்கே அவள் வருகிறாள், ஒரு குச்சியில் ஒரு ஜோடி கண்ணாடிகள் அவளிடம் இருந்தன. அதை இவ்விதமாகப் பற்றிப் பிடித்திருந்தாள். இப்பொழுது, நல்லதும் நலமுமான காரியம் உங்களுக்குத் தெரியும், அவளிடமிருந்து இவ்விதமாக தூரத்தில் இருக்கும் கண்ணாடிகள் வழியாக யாராலும் பார்க்க முடியாது, அதை இவ்விதமாகப் பற்றிப் பிடித்திருந்தாள்.

இங்கே அவள் இதைப் போன்று தன்னுடைய தலையை உயர்த்தினவளாய் அந்த கண்ணாடிகள் வழியாக பார்த்துக் கொண்டு, அவளுடைய கரங்கள் முழுவதுமாக வளையல்களை அணிந்து கொண்டு, பிசாசினுடைய சேணத்தின் மேல் இருக்கும் குதிரை சேண வளையம் போன்ற காதணிகளைத் தொங்க விட்டுக் கொண்டு வருகிறாள்...?... அவளுடைய கண்களில் கண்ணாடிகளுடன் இதைப்போன்று அங்கே நடக்க

ஆரம்பித்து, அவள், “நீங்கள் டாக்டர். பிரன்ஹாமா?” என்று கேட்டாள்.

நான், “இல்லை, சீமாட்டியே. நான் சகோதரன் பிரன்ஹாம்” என்றேன்.

அவள், “நல்லது, டாக்டர். பிரன்ஹாம், நான் உங்களை சந்திப்பதில் இனிமையடைகிறேன்” என்றாள்.

இதைப்போன்று பெரிய கொழுத்த கரம் அவளுக்கிருந்தது. நான் அதைப் பிடித்தேன்; நான் அவளிடம், “இங்கே இறங்கி வாருங்கள், அதற்குப்பிறகு நான் உங்களை மீண்டும் சந்திக்கும் போது உங்களை அறிந்து கொள்வேன்” என்று கூறினேன்.

41. அந்த எல்லாக் காரியங்களையும் அணிந்திருந்தாள். அதில் எதுவுமேயில்லை. அது முட்டாள்தனம். நிச்சயமாக, எப்படி யாயினும் நீங்கள் யார்? 50 டாலர் பெறுமானமுள்ள கோட்டை அணிந்து கொண்டு, மூக்கை

மேலே உயர்த்திக் கொண்டு, சுற்றித் திரிகிறீர்கள், மழை பெய்தால், உங்களை மூழ்கடித்துக் கொன்று போடும், நீங்கள் ஏதோவொன்றாக இருப்பதாக எண்ணிக்கொள்கிறீர்கள். நீங்கள் ஆறு அடி மண் தான். உங்க ளுடைய ஆத்துமா இரட்சிக்கப்படவில்லையென்றால், நீங்கள் இழக்கப்பட்டிருக்கிறீர்கள்! அதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது. ஆனால் அதுதான் இன்றைய உலகமாக உள்ளது. “ஓ, நாம் யாரோ ஒருவராக இருக்கிறோம். நாம் எங்கேயோ சேர்ந்தவர்களாயிருக்கிறோம்.” அப்படியிருக்க கேலி செய்து, ஜனங்களைப் பரிசுத்த உருளையர்கள் என்று அழைக்கிறீர்கள். ஓ, என்னே.

மரியாள் ஓடிச் சென்று எலிசபெத்தைப் பற்றிக் கொண்டு, அவர்கள் ஒன்றாக தங்களுடைய கரங்களை ஒருவர் மற்றவரைச் சுற்றிலும் போட்டுக் கொள்வதை என்னால் காண முடிகிறது.

மரியாள், “ஓ, எலிசபெத்தே, நான் உன்னைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் அடைகிறேன்” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அவள் தாயாகியிருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியும். அவள், “நீ ஒரு தாயாகியிருக்கிறாய் என்பதை நான் கேள்விப்பட்டேன்” என்றாள். இப்பொழுது, இதை ஒரு நிமிடம் நாடகக் காட்சியில் அமைப்போம்.

42. எலிசபெத், “ஆம், மரியாளே, அது சரிதான், ஆனால் எனக்கு கவலையாயுள்ளது” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

“ஏன்?” “ஏன், அது – அது ஒரு தாயாகிய என்னிடம் ஆறுமாதங்களாக இருக்கிறது, இதுவரையிலும் அங்கே எந்த ஜீவனும் இல்லை.” இப்பொழுது, அது இயல்பை விட முற்றிலும் குறைவாக உள்ளது: ஏறக்குறைய இரண்டு, மூன்று

மாதங்கள். எனவே அது, “ஆறு மாதங்களாகியும் ஜீவனில்லை, எனக்கு அதைக் குறித்து கவலையாயுள்ளது” என்றது.

“ஏன்,” அவள், “எனக்கு கவலையில்லை. இப்பொழுது கவனி, நீ ஒரு தாயாகப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும், ஏனெனில் தூதன் அவ்வாறு என்னிடம் கூறியிருக்கிறான். ஆனால் தூதன் என்னிடமும் கூட தோன்றினான். எந்த மனிதனையும் அறியாமலேயே நான் ஒரு குமாரனைக் கொண்டிருக்கப்போகிறேன் என்று கூறினான். நான் அவருடைய பெயரை இயேசு என்று அழைக்கப் போகிறேன்” என்றாள்.

ஒரு மனித ஜீவனின் சாவுக்குரிய உதடுகளிலிருந்து இயேசு என்ற நாமம் முதலாவதாக புறப்பட்டு போன உடனே, அந்த தாயின் கருப்பையிலிருந்த அந்த

மரித்துப்போன சிறு குழந்தை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கத் தொடங்கியது. அது சரியே.

சகோதரனே! ஒரு ஸ்திரீயின் கர்ப்பபையில் இருந்த ஒரு மரித்துப் போன குழந்தையை அது சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கச் செய்யுமானால், அது மறுபடியும் பிறந்த ஒரு சபைக்கு என்ன செய்ய வேண்டும்? நிச்சயமாக. ஒரு சாவுக்குரிய உதடுகள் வழியாக இயேசு என்ற நாமம் முதலாவது பேசப்பட்ட போது...

ஆமென். பிசாசு அலறி கூச்சலிட்டு, வெளியேறுவதையும், பாவிகள் கதறி அழுவதையும் குறித்து பேசுகிறீர்கள்... அந்த நாமம், அதை நீங்கள் தூக்கி எறிய முடியாது, அரைகுறையாக அதை கனப்படுத்த முடியாது, அப்போதும் அதில் வல்லமை உண்டு, நீங்கள் அதை

விசுவாசித்து, அதை கனப்படுத்தியாக வேண்டும். தேவன் அதை அருளுவார்.

43. இப்பொழுது, “நீ வாழ்த்தினவுடனே” என்றாள், “பாக்கியவதி...” என்றாள், பரிசுத்த ஆவியானவர் அந்த தாயாரிடம் கடந்து சென்றார். “என் ஆண்டவருடைய தாயார் வந்தது எதினால் கிடைத்தது? உன்னுடைய வாழ்த்துதல் என் காதில் விழுந்தவுடனே, வயிற்றிலுள்ள என் பிள்ளை களிப்பாய் துள்ளிற்று” என்றாள்.

புதிதான ஏதோவொன்று சத்தமிடுவதைக் குறித்து பேசுகிறீர்கள், ஊ, ஏன், சத்தமிடும் மார்க்கம் தான் உலகத்திலேயே பழைமையான மார்க்கமாகும். ஏன், உலகத்தோற்றத்திற்கு முன்பே – ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னே, தேவன் ஒரு நாள் யோபிடம் கேட்டார், அவர், “நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ

எங்கேயிருந்தாய்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் கெம்பீரித்தார்களே” என்றார். புதிதான ஏதோவொன்றைக் குறித்து பேசுகிறீர்கள், பழைமையான காலத்தின் புதிதான ஒரு காரியத்தை நாம் பெற்றிருக்கிறோம். அவ்வளவுதான். நிச்சயமாக. கெம்பீரித்தல், என்னவொரு தருணம், என்னே...

---



# இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?

